DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

Calendar ...

Miscellaneous ...

Preliminary Register ... Case No: C.C. No. 29/2023

Session ...

Prosecution / PW-8

Deposition of Witness for ... Defence / Court

---

Name : திரு.நாகநாதன்

Father's Name (or)

Husband Name : த/பெ.

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowedt.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 03.02.2026

---

**முதல் விசாரணை**

1. நான் கடந்த 30.06.2024ம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் கோவிலாங்குளம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்றேன். கடந்த 07.08.2020 தேதி மாலை 17 மணிக்கு ஆர்எஸ் மங்கல சார்பு ஆய்வாளராகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது ராமநாதபுரம் அரசுமருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சேத்திடல் கிராமத்தை பாண்டிமனைவி மலர்மணி

என்பவரை விசாரணை செய்து அவர் கொடுத்த புகார்மனுவை பெற்று 18.30 மணிக்கு நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப ஆர்எஸ் மங்கல காவல்நிலைய குற்ற எண்.258/2020 u/s 341,294(b),323,506(ii) IPC and 4 of TNPHW ACT ஆக வழக்கு பதிவுசெய்தேன். நான் பதிவுசெய்த முதல் தகவல்அறிக்கை அ.சா,ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

2.பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு 07.08.2020 தேதி 19.30 மணிக்கு சம்பவயிடமான சேத்திடல் செல்லும் ரோட்டில் கூட்டாம்புளி சந்திப்பு சென்று சாட்சிகள் சுப்ரமணி, சரத்குமார் ஆகியோர்முன்னிலையில் பார்வைமகசர் , வரைபடம தயார் செய்தேன். பார்வைமகசர் அ.சாஆ.6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

3.,பின்னர் சாட்சிகள் அ.சா.1 மலர்மணி அ.சா.2 லெட்சுமணன், அ.சா.3 நாகராஜ், அ.சா.4 தர்மராஜ், அ.சா.5 சுப்ரமணி, அ.சா.,6 சரத்குமார்ஆகியோரைவிசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் காயம்பட்ட நபருக்கு மருத்துவசிகிச்சை அளித்த ராமநாதபுரம் அரசுமருத்துவமனை மருத்துவர் மதிவாணன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து புகார்தாரருககுஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று பெற்றேன்.

4. வழக்கின்எதிரியான சத்தியமூர்த்தி இராமநாதபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணைபெற்றதால் அவர் மீது கைதுநடடிவக்கை மேற்கொள்ளவில்லை. பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது u/s 341,294(b),323,506(ii) IPC and 4 of TNPHW ACT கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1.புகார்தாரரும எதிரியும உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிக்கம் புகாதாருககும் இடையில் முனபிரச்சனை உள்ளதால் பேசி கொள்ளமாட்டார்கள் என்றால்சரிதான். சம்பவம் நடைபெற்ற தேதி 0608.2020 என்றால் சரிதான். 06.08.2020 தேதி புகார்தாரர் என்னிடம் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் 06.08.2020 தேதி சிகிச்சைக்காக மருத்துவமனை செல்லவில்லை என்றால் சரிதான்.07.08.2020 தேதி தான் சென்றார். சம்பவயிடத்தின் அருகில்முருகேசன்,சுந்தரம், அன்பரசு, ராமநாதன்

ஆகியோர் வீடுகள் உள்ளதுஎ ன்றால்சரிதான். மேற்படி நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிககவில்லை என்றால் சரிதான்.

3, அ.சா.1 புகாரில் தெரிவித்துள்ளவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அவர் கொடுத்த பெய் புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்றஇறுதியறிக்கை பதிவுசெய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல.ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.